# தாழ்மை மற்றும் பணிவு

முஸ்லிம் ஃகலீஃபாவான ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்களிடம் ஒரு விருந்தினர் வந்திருந்தார், இருவரும் ஒன்றாக அமர்ந்து கொண்டிருந்தார்கள், அங்கிருந்த விளக்கு அணையத்துவங்கியது. ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்கள் எழுந்து விளக்கைச் சரிசெய் தார்கள், விளக்கு எரிய ஆரம்பித்தது. அந்த விருந்தாளி கூறினார், நீங்கள் ஏன் கஷ்டப்பட்டீர்கள் அடியானுக்குக் கட்டளையிட்டிருக்கலாம் அல்லது ஒரு பணியாளரை அழைத்திருக்கலாம். ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) விருந்தாளி கூறியதைக்கேட்டு சொன்னார்கள், சகோதரரே, நான் முன்பும் உமராகத்தான் இருந்தேன் இப்போதும் உமராகவே இருக்கி றேன், எதுவும் குறையவும் கூடவுமில்லை. அல்லாஹ்விடத்தில் எல்லோரை யும்விட சிறந்த மனிதர் யாரெனில் பணிவானவரும் தன்னடக்கமானவரும் தான்.

ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீஃக் (ர) அவர்கள் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்வதை வழக்கமாகக்கொண்டவர். உதாரணமாக, அவர் ஆட்டுப்பாலை யும் கறந்து கொடுப்பார். அவர்கள் ஃகலீஃபாவாகப் பதவியேற்றபின் மதீ னாவிலுள்ள பெண்கள் நினைத்தார்கள், இப்போது இவர்கள் ஃகலீஃபா வாகிவிட்டார்கள் எங்கள் ஆட்டுப்பாலை இவர் எவ்வாறு கறக்கமுடியும்? ஆனால், ஃகலீஃபாவாகிவிட்டபின்பும் அவருடைய பணிவு மற்றும் தாழ் மையான பண்பில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஃகலீஃபாவின் பொறுப்புகளுக்கிடையே அப்பெண்களுக்காக தொடர்ந்து ஆட்டுப்பாலைக் கறந்துகொடுத்துவந்தார்கள், ஒரு வயதான பெண்மணியின் வீட்டிற்குச் சென்று அவருடைய வீட்டைக் கூட்டிவிட்டு மற்ற பணிகளையும் செய்து வந்தார்கள். ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்கள் தலைமையில் படை ரோமப்பேரரசின் எல்லைக்கு புறப்பட்டுச்செல்ல இருந்தபோது ஹஜ்ரத் ஜ்ஸைத் (ர) அவர்களின் வாலிப மகன் ஹஜ்ரத் உசாமா (ர) குதிரை யின்மீது அமர்ந்திருந்தார், ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீஃக் (ர) அவர்கள் நகரத் திற்கு வெளியே சென்று அனுப்பிவைக்கச் சென்றபோது அவர்கள் நடந்து சென்றார்கள். இதனை ஹஜ்ரத் உசாமா (ர) அவர்களால் சகித்துக் கொள்ள முடியாமல் நீங்கள் குதிரைமீது சவாரி செய்யுங்கள் அல்லது எனக்கு குதிரை மீதிருந்து இறங்கிவிட அனுமதியுங்கள் என்று சொன்னார்கள். ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீஃக் (ர) அவர்கள் பணிவுடன் கூறினார்கள் நான் குதிரைமீது ஏறி உட்காரவும் தேவையில்லை நீங்கள் குதிரைமீதிருந்து இறங்கவும் தேவையில்லை, அல்லாஹ்வின் பாதையில் சிறிதுநேரம் என்னுடைய பாதங்களில் தூசிபடிந்துவிடுமானால் அதில் எந்த கஷ்டம் ஆகிவிடப் போகிறது?

www.uzaifalahi.com

ஒருவர் தன் முதுகின்மீது ஒரு மூட்டை நிறைய மாவு சுமந்துகொண்டு ஒரு வீட்டிற்குள் சென்றார், அந்த வீட்டில் அனைவரும் பசியுடன் இருந்தார்கள், அனாதைக் குழந்தைகள் பசியின் கொடுமையால் அழுதுகொண்டிருந்தார்கள், அவர்களுடைய தாயிடம் எதுவுமே இல்லாதிருந்தது. அந்த மனிதர் மாவு மூட்டையை இறக்கிவைத்து அடுப்பில் நெருப்பைமூட்டிப் பற்ற வைத்து, அந்த அடுப்பை உணவு தயாராகிவிடும்வரை எரியவைத்துக் கொண்டிருந்தார். இவர் வேறுயாருமில்லை, அந்நாட்டு ஃகலீஃபாவான ஹஜ்ரத் உமர்ஃபாரூக் (ர) அவர்கள்தான்.

ஹஜ்ரத் உமர் ஃபாரூக் (ர) அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் பாரசீகப் பேரரசர் கிஸ்ராவிடமிருந்து ஒரு தூதர் மதீனாவிற்கு வந்தார். அவர் ஃகலீஃபாவின் அரண்மனைக்கான விலாசத்தை விசாரித்தார், மக்கள் கூறினார்கள், எங்கள் ஃகலீஃபாவுக்கு அரண்மனைகள் இருப்பதில்லை. அவர் ஃகலீஃபாவை சந்திக்கவேண்டும் என்று கூறினார். மக்கள் அவரை அழைத்துக்கொண்டு சென்று ஃகலீஃபாவை சந்திக்கவைத்தார்கள், அப்போது ஃகலீஃபா அவர்கள் ஒரு மரத்தின் அடியில் நிழலில் படுத்துக்கொண்டிருந்தார்கள். அந்தத் தூதர் ஆச்சரியத்திற்குள்ளானார், ஃகலீஃபாவுக்கு அரண்மனையும் இல்லை, அரசவையுமில்லை, மெய்க்காப்பாளர்கள் காவலாளர்கள், பணியாளர்கள் யாருமே இல்லை, தன்னந்தனியாக எவ்வித அச்சமும் இல்லாது, எவருடைய பெயரைக்கேட்டு அக்காலத்து வல்லரசர்களும் நடுங்கிக்கொண்டிருந்தார்களோ அவர் ஒரு மரத்தின் அடியில் சுகமாகப் படுத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய ஆச்சரியம் எல்லைகடந்துவிட்டது, கட்டுக் கடங்காது தன்னையே மறந்த நிலையில், உமர் (ர) அவர்களே, நீங்கள் உங்கள் ஆட்சியில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டிவிட்டீர்கள், ஆகவேதான் நீங்கள் எவ்வித அச்சமுமின்றி படுத்து உறங்கிக்கொண்டிருக்கின்றீர்கள் என்று கூறினார்.

இது பாரசீக நாட்டின் மதாயின் நகரமாகும், இதே ஈரான் நாட்டிலிருந்து உண்மையான மார்க்கத்தைக் கண்டறியவேண்டும் என்பதற்காகவே தன்னந்தனியாக புறப்பட்டுச்சென்ற அந்த மனிதர்தான் இதன் ஆட்சிப்பொறுப்பில் இருந்தார். ஹஜ்ரத் சல்மான் ஃபார்சி (ர) அவர்கள் தன்னைச்சுற்றி அமர்ந்துள்ள ஃகுரைஷிகளான அவைத்தலைவர்கள் தத்தம் சமூகங்கள், செல்வங்கள் மற்றும் பதவிகளைப்பற்றியெல்லாம் பெருமையுடன் கூறிக் கொண்டிருக்கின்றனர், ஹஜ்ரத் சல்மான் ஃபார்சி (ர) அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இறுதியில் தன்னைப்பற்றிக் கருத்துக்கூறும் வகையில் கூறினார்கள், என்னைப்பற்றிய உண்மையைப் பொருத்தவரையில் ஆரம்பத்தில் ஒரு அசுத்தத்துளியாக இருந்தேன், பின்பு நான் ஒரு மரண மடைந்த பிணமாக மாறிவிடுவேன், பின்பு மீஸான் எனும் தராசு நிலை நாட்டப்படும், அதில் என்னுடைய செயல்கள் பளுவானவையாக இருக்கு



www.uzairfalahi.com

மானால் நான் கண்ணியமானவனாகவும் பெருமைக்குரியவனாகவும் ஆகிவிடுவேன், தராசில் அமல்கள் லேசானதாக இருக்குமானால் பழிப்புக்கும் இழிவிற்கும் ஆளாகிவிடுவேன்.

## தாழ்மை என்றால் என்ன?

தாழ்மை என்பது என்னவெனில் ஒரு மனிதன் பணிவுடனும் தன்னடக்கத்துடனும் இருக்கவேண்டும், திமிர்பிடித்தவனாக, தற்பெருமை, கர்வம் கொண்டவனாக இருக்கக்கூடாது. அவன் தன்னை மற்றவர்களைவிட உயர்ந்தவனாகவோ மற்றவர்கள் தம்மைவிடத் தாழ்ந்தவர்கள் அல்லது இழிவானவர்கள் என்றோ நினைத்துவிடக்கூடாது. மனதாலும் இவ்வாறு நினைக்கக்கூடாது சொல்லாலும் தன்னுடைய கொடுக்கல் வாங்கல் மற்றும் ஈடுபாடுகளின் மூலமாகவும் இவ்வாறு வெளிப்படுத்தக்கூடாது. மூஃமினான ஒருவன் ஒவ்வொருவரையும் கண்ணியப்படுத்துவான்,அவன் செல்வந்தனாக இருப்பினும் ஏழையாக இருப்பினும், பலவீனமானாக இருந்தாலும் வலிமைவாய்ந்தவனாக இருந்தாலும்சரியே. அல்லாஹ் இவ்விதமான பணிவு மற்றும் தாழ்மையினை மேற்கொள்ளவேண்டும் என்று தான் கட்டளையிட்டுள்ளான்: (الشعراء: 215) وَٱخۡفِضۡ جَنَاحَكَ لِمَنِ ٱتَّبَعَكَ مِنَ ٱلۡمُؤۡمِنِينَ ٢١٥

பொருள்: *மேலும், நம்பிக்கையாளர்களில் யார் உம்மைப்பின்பற்றிக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களிடம் பணிவாய் நடந்துகொள்ளும்*

மற்றொரு வசனத்தில் கூறுகிறான்:

تِلۡكَ ٱلدَّارُ ٱلۡأٓخِرَةُ نَجۡعَلُهَا لِلَّذِينَ لَا يُرِيدُونَ عُلُوًّا فِي ٱلۡأَرۡضِ وَلَا فَسَادًاۚ وَٱلۡعَٰقِبَةُ لِلۡمُتَّقِينَ ٨٣

(القصص:83)

பொருள்:*அந்த மறுமை வீட்டினை எவர்கள் உலகில் பெருமையடிக்கவும் அராஜகம் விளைவிக்கவும் விரும்பமாட்டார்களோ அவர்களுக்கே உரித்தாக்கிவைத்துள்ளோம்*

ஃபுளைல் பின் அயாஸ் (ரஹ்) எனும் பிரபலமான பெரியாரிடம் தாழ்மையைப்பற்றிக் கேட்டபோது கூறினார்கள்: தாழ்மை என்பது நீ உண்மைக்கு முன்னால் தலைசாய்த்து அதனைப் பின்பற்றி நடக்கவேண்டும், அது ஒரு சிறு குழந்தை உனக்குமுன் வெளிப்படுத்தியிருந்தாலும் அறியாமையில் மூழ்கியிருக்கும் ஒருவனால் கூறப்பட்டிருந்தாலும் சரியே. ஹஜ்ரத் அபூ பக்ர் ஸித்தீஃக் (ர) அவர்கள் கூறுகிறார்கள், உங்களில் யாரும் எந்த ஒரு மனிதரையும் இழிவானவனாக ஒருபோதும் நினைத்துவிடக்கூடாது, ஏனெனில், முஸ்லிமான ஒருவன் எவ்வளவு சிறியவனாக இருந்தாலும் அல்லாஹ்வின் பார்வையில் அவன் மிகப்பெரியவன். பணிவு மனிதனுடைய கிரீடம் என்பது மிகப்பிரபலமான ஒரு பழமொழியாகும்.

www.uzairfalahi.com

## இறைத்தூதர் ﷺ அவர்களின் பணிவு

அல்லாஹ் தஆலா இறைத்தூதர் ﷺ அவர்களை நற்குணங்களை முழுமைப் படுத்துவதற்காகவே இவ்வுலகில் அனுப்பிவைத்தான். இவ்வகையில், இறைத்தூதர் ﷺ அவர்கள் நற்குணங்களுக்கெல்லாம் வடிவமானவர்கள். அவர்களுடைய வாழ்க்கையில் தாழ்மையும் பணிவும் உயர்ந்து காணப்பட்டது. இவ்வகையிலும் அவர்கள் மனித குலத்திற்கே முழுமையான முன் மாதிரியாகவும் பின்பற்றி நடக்கவேண்டிய வாழ்க்கைமுறையாகவும் திகழ்ந்தார்கள். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்களிடம் இறைத்தூதர் ﷺ அவர்களின் இல்லற வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்று கேட்கப்பட்டபோது அவர்கள் கூறினார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் வீட்டு வேலைகளை வீட்டிலுள்ளவர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள், ஆனால், தொழுகையின் நேரம் வந்துவிடுமானால் அனைத்தையும் விட்டுவிட்டு தொழுகைக்காக சென்றுவிடுவார்கள் (புக்ஹாரி). இறைத்தூதர் ﷺ அவர்கள் ஆடுகளின் பால் கறப்பார்கள், தன்னுடைய செருப்புக்களைத் தாமே சரிசெய்துகொள் வார்கள், தன்னுடைய துணிகளில் தாமே ஒட்டு போட்டுக்கொள்வார்கள், உணவு உட்கொள்ள உட்காரும்போது பணியாட்களையும் உடன் உட்கார வைத்துக்கொள்வார்கள், கடைத்தெருவிற்குச் சென்றால் தனக்குத்தேவை யான பொருட்களை தாமே வாங்கிக்கொள்வார்கள் மற்றும் அவற்றைத் தாமே வீட்டிற்குக்கொண்டும் வருவார்கள், சந்திப்பவர்களுக்கு முதலில் சலாம் சொல்வார்கள், முஸாஃபஹா செய்வார்கள், இவ்விஷயத்தில் சிறியவர் பெரியவர், கருப்பர் வெள்ளையானவர், சுதந்திரமானவர் அடிமை என்ற எந்த பாகுபாட்டினையும் செய்ததில்லை. அனைத்து நபித்தோழர்க ளிடமும் ஒரே மாதிரியாக நடந்துகொள்வார்கள் மற்றும் அவர்களுடைய அனைத்துவிஷயங்களிலும் சிறியதோ பெரியதோ தாமும் கலந்துகொள் வார்கள்.

மக்காஹ் மாநகரத்தின் வெற்றிக்குப்பின் அவர்கள் ﷺ வெற்றிவாகை சூடியவராக மக்காஹ்வில் பிரவேசித்தபோது அவர்களுடைய பணிவும் தன்னடக்கமும் எந்த அளவிற்கு இருந்தது என்றால் அல்லாஹ்வுக்குமுன் அவர்கள் சிரம் தாழ்த்தியவர்களாகவே இருந்தார்கள், பார்ப்பவர்களுக்கு அவர்களுடைய தலை ஒட்டகத்தின் முதுகுடன் ஒட்டிவிடுவது போன்றே தோன்றியது. இறைத்தூதர் ﷺ அவர்களுடைய இந்தப் பணிவின் காரண மாகவேதான் தன்னையும் தன்னைப்பின்பற்றி நடந்த தோழர்களையும் இயன்ற அளவிற்கு இன்னல்களை விளைவித்தவர்கள் எவரையும் எவ் வகையிலும் பழிவாங்கும் எண்ணத்திற்கே இடமளிக்கவில்லை. அனை வரையும் மன்னித்து اِذْهَبُوْا فَاَنْتُمُ الطُّلَقَآءُ *இன்று நீங்கள் அனவைரும் சுதந்திர*

www.uzairfalahi.com

*மானவர்களாகிவிட்டீர்கள் என்று பொது மன்னிப்பையும் அளித்தார்கள். (சீரத்து இப்னு ஹிஷ்ஷாம்).*

*தாழ்மை மற்றும் பணிவு ஒரு மகத்தான பண்பாகும், இந்தப் பண்பு ஒரு மனிதனிடத்தில் வந்துவிடுமேயானால் அவன் அல்லாஹ்வுக்கு நெருங்கிய வனாக ஆகிவிடுகிறான், மேலும், அவன் அல்லாஹ்வுக்கு அடிபணிவதிலும் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் சுறுசுறுப்பாகவும் எப்போதும் தயா ராகவும் இருப்பான். அவன் கட்டளைகளுக்குமுன் தலைசாய்த்தவனாகவும் இருப்பதோடு மாறுசெய்வதுபற்றி நினைக்கவும் மாட்டான். இந்தப்பண்பு அவனை இறைத்தூதர் (ஸ)அவர்களுடைய சுன்னத்தான முறைகளைப் பின் பற்றி நடப்பதிலும் உணர்வுப்பூர்வமாகவே ஈர்க்கப்பட்டு அதில் மனநிறைவு பெறும் அளவிற்கு மாற்றிவிடுகின்றது. அவன் முஸ்லிம்கள் அனைவருட னும் பண்பாகவும் நடந்துகொள்வான், கர்வம் மற்றும் தற்பெருமையி லிருந்து விலகிவிடுகிறான். மற்றவர்களுடைய உரிமைகளை நிறைவேற்றி அவர்களைக் கண்ணியப்படுத்துபவனாக நடந்துகொள்கிறான்.*

## பணிவின் சிறப்பு

*பணிவின் ஆதாரமாக இருப்பது ஒருவருடைய உள்ளத்தின் தூய்மை மற்றும் பரிசுத்தமே. இந்தப் பண்பு எங்கு இருக்குமோ அங்கு நிச்சயம் பரஃஸ்பர அன்பு மற்றும் சகோரத்துவம், அனுதாபம் மற்றும் துக்கம் பகிர்ந்துகொள் ளும் பண்பு இருக்கும், ஒருவரையொருவர் கண்ணியப்படுத்துவது மற்றும் சமத்துவம் பெறப்படும். பகைமை, பொறாமை மற்றும் வெறுப்பு அரவே இருக்காது. இவை எல்லாவற்றையும்விட இதனால் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தைபெறும் வாய்ப்பு கிடைக்கின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*

مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ، وَمَا زَادَ اللهُ عَبْدًا بِعَفْوٍ، إِلَّا عِزًّا، وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلَّهِ إِلَّا رَفَعَهُ اللهُ

*கொடுப்பதால் செல்வம் குறைவதில்லை, ஒரு அடியான் எவருடைய குற்றத்தையும் மன்னித்துவிடுவதனால் அல்லாஹ் அவனுடைய மரியா தையை அதிகப்படுத்திவிடுகிறான், யார் அல்லாஹ்வுக்காகப் பணிவையும் தாழ்மையையும் மேற்கொள்கிறானோ அல்லாஹ் அவனுக்கு உயர்வினை அளிக்கின்றான் (முஸ்லிம்). மற்றொரு நபிமொழியில் கூறப்படுவது:*

إِنَّ اللَّهَ أَوْحَى إِلَيَّ أَنْ تَوَاضَعُوا حَتَّى لَا يَفْخَرَ أَحَدٌ عَلَى أَحَدٍ وَلَا يَبْغِيَ أَحَدٌ عَلَى أَحَدٍ

*அல்லாஹ் எனக்கு மக்கள் பணிவை மேற்கொள்ள வேண்டும் மற்றும் ஒரு வர் மற்றவர்மீது பெருமை பாராட்டக்கூடாது என்றும் எவரும் மற்றவர் மீது அத்துமீறல்களைச் செய்யக்கூடாது என்றும் வஹியின் மூலம் கட்டளை யிட்டுள்ளான்.*



www.uzairalahi.com

(முஸ்லிம்). ஒரு கவிஞன் கூறுகிறான்:

زمین کی طرح جس نے عاجزی وخاکساری کی

خدا کی رحمتوں نے اس کو ڈھانکا آسماں ہو کر

பொருள்: *தரையைப்போன்று யார் தாழ்மையினை மேற்கொள்வார்களோ, அல்லாஹ்வுடைய கருணையும் ரஹ்மத்தும் அவனை வானமாக மாற்றி அரவணைத்துக்கொள்கின்றது.*

**கர்வம்:**

தாழ்மையின் எதிர்மறையானது கர்வமும் ஆணவமுமாகும். படைப்பினமானமற்றும் அனைத்து வகையிலும் தேவைகளால் சூழப்பட்ட மனிதனுக்கு கர்வம் கொள்வது எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. மனிதன் உண்மையில் தன்னுடைய படைப்பினைப்பற்றி சிந்தித்துப்பார்ப்பானேயானால் ஒரு போதும் கர்வம் கொள்ளவேமாட்டான். ஹதீத்ஸ் ஃகுத்சி எனும் அருள் வாக்கில் கூறப்பட்டுள்ளது: الْكِبْرِيَاءُ رِدَائِي،وَالْعَظَمَةُ إِزَارِي،فَمَنْ نَازَعَنِي وَاحِدًا مِنْهُمَا،قَذَفْتُهُ فِي النَّارِ

பொருள்: *கர்வம் எனக்கே உரிய போர்வையாகும், பெருமை என்னுடைய கீழாடையாகும், இதில் யாரும் என்னுடன் உரிமை கொண்டாடி வாதிட நினைத்தால் அவனை நான் நரகத்தில் எறிந்துவிடுவேன்* (முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி). யாருடைய சிந்தனையில் கர்வம் தலைதூக்கி ஆடுகிறதோ அவன் தன்னை அனைவரையும்விட உயர்ந்தவனாகக் கருத ஆரம்பித்துவிடுகிறான், ஆனால், அவனுடைய வாழ்க்கையில் தீங்கானவை ஏராளம். இதன் காரணமாக,அவனுடைய வாழ்க்கையின் ஒருமைகள் உடைந்து சிதறிவிடுகின்றன, வெறுப்பு தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது, அதன் பலனாக விரோத மனப்பான்மையும் பகைமையும் ஏற்பட்டுவிடுகிறது. இது ஒரு வகையான பிணியாகும், யார் இந்த நோயின் தாக்கத்திற்கு ஆளாகிவிடுகிறானோ அவனிடமிருந்து நன்மையானவை விலகிவிடுகின்றன, எந்த ஒரு நல்ல விஷயத்தையும் அவன் செவியுறமாட்டான், எவருடைய நன்மையான அறிவுரைகளையும் ஏற்கமாட்டான், தன்னுடைய சமூகத்தாரிடமிருந்து விலகியே இருப்பான், அதன் பின்பு ஷைத்தான் அவனை பல்வேறு விதமான பாவங்களின் பாதாளத்தில் அலையவிட்டுவிடுகிறான். திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் தன்னடியார்களுக்கு அறிவுரை கூறுகிறான்:

**وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي ٱلْأَرْضِ مَرَحًاۖ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ ﴿١٨﴾ (لقمان: 18)**

பொருள்: *மக்களைவிட்டு முகந்திருப்பியவாறு பேசாதே, பூமியில் கர்வம் கொண்டு செருக்காய் நடக்காதே, அகந்தையும் ஆணவமும் கொண்ட எவனையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.*



www.ujzaifalahi.com

கர்வம் கொள்வோர்களுக்குக் கடும் தண்டனையைப்பற்றி எச்சரித்துக் கூறு கிறான்: سَأَصْرِفُ عَنْ ءَايَٰتِيَ ٱلَّذِينَ يَتَكَبَّرُونَ فِى ٱلْأَرْضِ بِغَيْرِ ٱلْحَقِّ ﴿١٤٦﴾ (الأعراف:146)
பொருள்: *பூமியில் நியாயமின்றி பெருமை கொள்பவர்களுடைய பார்வை களை என்னுடைய சான்றுகளைவிட்டு நான் திருப்பிவிடுவேன்.*

மற்றொரு வசனத்தில் கூறுகிறான்:

وَيَفْعَلُ كَذَٰلِكَ يَطْبَعُ ٱللَّهُ عَلَىٰ كُلِّ قَلْبِ مُتَكَبِّرٍ جَبَّارٍ ﴿٣٥﴾ (غافر: 35)

பொருள்: *இவ்வாறே ஒவ்வொரு ஆணவக்காரன் மற்றும் கொடுங்கோலனு டைய உள்ளத்தின்மீதும்அல்லாஹ் முத்திரையிட்டுவிடுகின்றான் (அல் மூஃமின்:35)*

மேலும் கூறுகிறான்:(23 :النحل) إِنَّهُۥ لَا يُحِبُّ ٱلْمُسْتَكْبِرِينَ ﴿٢٣﴾ பொருள்: *நிச்சயமாக அகந்தைகொள்வோரை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை.*

அல்லாஹ்வை நேசிப்பதிலிருந்து விலகி இருப்பது ஒரு மனிதனை நரகம் வரையில் கொண்டு சேர்க்கின்றது.(60:الزمر) أَلَيْسَ فِى جَهَنَّمَ مَثْوًى لِّلْمُتَكَبِّرِينَ ﴿٦٠﴾
பொருள்: *பெருமையடிப்பவர்களுக்கு நரகம் போதிய தங்குமிடமில்லையா என்ன?*

கர்வம் கொள்பவர்களுடைய நிலையும் அபூர்வமானது, ஒவ்வொரு மனித னும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ள நிலையில் அல்லாஹ் தஆலா அளித்த அருட்கொடைகளைக்கொண்டே பெருமையும் கர்வமும் கொள்கின்றான். கர்வம் என்பது கீழ்த்தரமான இயல்பினைக் கொண்டுள்ளவர்களில் உண்டாகிவிடுகிறது மற்றும் மனிதனின் உணர் வின்மை மற்றும் நன்றி மறக்கும் இயல்புகள் அதற்கு வலுவூட்டுகின்றன. மனிதன் இறைவனால் அருளப்பட்ட அறிவாற்றலின் காரணமாக கர்வ மும் பெருமையும் கொள்கிறான். அல்லாஹ் அருளிய ஆற்றல்களைப் பயன் படுத்தி அவன் தன்னுடைய அறிவை வளர்த்துக்கொள்கிறான், அவனுக்கு அல்லாஹ் கல்வியறிவும் அறிவாற்றலும் பெறும் வாய்ப்பளித்தால், அவன் அந்த அறிவாற்றலின் காரணமாகவே கர்வமும் கொள்கிறான், மற்றவர் களை இழிவானவர்களாகவும் தன்னை உயர்ந்தவனாகவும் கருதிக்கொள் கிறான். இதுபோன்றே, மனிதன் தன்னுடைய மரபு மற்றும் வம்சத்தின் அடிப்படையிலும் கர்வம் கொள்கிறான். உண்மை என்னவெனில், இதில் இவனுடைய எவ்விதப் பங்குமில்லை. அல்லாஹ் தஆலா யாரை எந்த வம்சத்தில் படைக்க விரும்புகிறானோ அவ்வாறே படைக்கின்றான். இதி லும் கர்வமும் பெருமையும் கொள்வது என்றால் அதற்கு என்ன பொருள்?

www.uzaifalahi.com

சில மனிதர்களுக்கு அல்லாஹ் தஆலா அழகை வழங்குகிறான், அவர்கள் அதன் காரணமாகவே கர்வம் கொள்கின்றனர், உண்மையில் இதில் அவர்கள் செய்வது ஒன்றுமில்லை. அவன் யாரை நாடுகின்றானோ அழகுமிக்கவர்களாகப் படைக்கின்றான், யாரை நாடுகின்றானோ கோரமான வடிவில் படைக்கின்றான். இது நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ள நிலையாகும், கர்வம் கொள்ளும் விஷயமல்ல. அழகு அலங்காரத்தைப்போன்றே சக்தியும்வலிமையும், பதவி அந்தஸ்து மற்றும் கலை மற்றும் திறனும், செல்வமும் வளமும், இவை அனைத்துமே அல்லாஹ்வின் அருட்கொடைகளாகும். இவை அவன் நாடிய வகையிலேயே ஒருவருக்குக் கிடைக்கப்பெறுகின்றன மற்றும் அவன் நாடியவரை மட்டுமே அவனிடம் இருக்கின்றன, அவற்றை அவன் எப்போது நாடுகின்றானோ திரும்பப் பறித்தும் கொள்கின்றான். எந்த பொருட்களுக்கு மனிதன் உரிமையாளனில்லையோ, அவற்றைத் தன்னிடம் நிரந்தரமாக வைத்துக்கொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இல்லையோ அல்லது அவற்றை மற்றவர்களுக்கு அளிக்கவும் முடியாதவனாக உள்ளானோ அவற்றின்மீது அவன் எவ்வாறு கர்வம் கொள்ள முடியும்?கர்வமும் பெருமையும் அறிவுக்கொவ்வாத மடத்தனமான செயல்களாகும். ஆகவேதான், இதனால் எந்த நன்மையும் ஏற்படுவ தில்லை, அது எங்குள்ளதோ அங்கெல்லாம் எந்த செயலிலும் தீங்குதான் ஏற்படுகின்றது. யாரிடம் இந்த கர்வம் வந்துவிடுகின்றதோ அவன் உணர்வுப்பூர்வமாகவே அசுத்தமுடையவனாக ஆகிவிடுகின்றான் மற்றும் அவனுடைய வாழ்க்கை முறையும் துர்நாற்றம் வீசக்கூடியதாக ஆகிவிடுவதோடு அவனுடைய இந்தப் போக்கின் காரணமாக அவனுடைய சமூகமே இதன் தாக்கத்திற்கு ஆளாகிவிடுகிறது.

## கர்வத்தின் தண்டனை

கர்வம் ஒரு மனிதனை திக்கற்றவனாகவே ஆக்கிவிடுகின்றது, இவ்வுலகிலும் அவன் இழிவையே சந்திக்கின்றான் மறுமையிலும் இழிவுக்கு ஆளாக்கப்படுகின்றான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ يَدْخُلُ الْجَنَّةَ مَنْ كَانَ فِيْ قَلْبِهِ مِثْقَالَ ذَرَّةٍ مِّنْ كِبْرٍ

பொருள்: *யாருடைய இதயத்தில் ஓர் அணுவளவு கர்வமும் பெருமையும் இருக்குமோ அவன் சுவர்க்கத்தில் நுழையவேமாட்டான்* (முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி). உலகத்தில் பெருமை கொண்டாடுபவர்களுக்கு மறுமையில் அளிக்கப்படும் வேதனையைப்பற்றி எடுத்துக்கூறும் வகையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

www.uzairfalahi.com

**يُحْشَرُ الْمُتَكَبِّرُونَ يَوْمَ الْقِيَامَةِ أَمْثَالَ الذَّرِّ فِي صُوَرِ الرِّجَالِ، يَغْشَاهُمُ الذُّلُّ مِنْ كُلِّ مَكَانٍ، يُسَاقُونَ إِلَى سِجْنٍ فِي جَهَنَّمَ، يُقَالُ لَهُ: بُولَسُ، تَعْلُوهُمْ نَارُ الْأَنْيَارِ، يُسْقَوْنَ مِنْ عُصَارَةِ أَهْلِ النَّارِ: طِينَةِ الْخَبَالِ**

*பொருள்: மறுமை நாளில் கர்வம் கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எழுப்பி ஒன்று சேர்க்கப்படுவார்கள் என்றால் அவர்கள் மனிதர்களுடைய வடிவில் இருந்தாலும் அவர்களுடைய சரீரம் எறும்புகளைப்போன்று மிகவும் சிறியதாக இருக்கும். அவர்கள் மீது அனைத்துப் புறங்களிலிருந்தும் இழிவு சூழ்ந்திருக்கும். நரகவாசிகளின் நச்சுத்தன்மையுடனான சீழ்ஜலம் அவர் களுக்குக் குடிக்கக்கொடுக்கப்படும் (திர்மிதி).*

ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய உண்மை நிலையை அறிந்துகொள்ள வேண்டும். அல்லாஹ்வின் படைப்பு என்ற வகையில் தாழ்மையும் பணி வும் ஒரு மனிதனுடைய இன்றியமையாத வாழ்க்கை முறையாக இருப்ப தோடு அது நன்மையானவற்றின் திறவுகோலாகவும் உள்ளது. பெருமை யும் கர்வமும் அல்லாஹ்வுக்கே உரியது, மேன்மையும் பெருமையும் அவனு டைய உரிமை. ஆனால், பெருமையும் கர்வமும் ஒரு அடியானை அவனுக் குரிய பாதுகாப்பான எல்லைக்கட்டுப்பாட்டிலிருந்து வெளியாக்கிவிடு கிறது, பிறகு அவனை அழிவிலிருந்து எதுவும் காப்பாற்றமுடியாதுபோகி றது. மாறாக, தாழ்மையும் பணிவும் ஒரு மனிதனை அவனுடைய உண்மை யான அந்தஸ்திலேயே நிலைத்திருக்கச்செய்கிறது, அந்த நிலையில்தான் அவனால் உண்மையானவை மற்றும் பொய்யானவற்றிற்கிடையில் வேறு பாட்டினைக்காணமுடிகின்றது, நேர்வழி அவன்கண்முன்னால் தெளிவாகத் தென்படுகிறது அதன் பலனாக அவனுக்கு அல்லாஹ்வின் திருப்பொருத் தம் பிரதிபலனாகக் கிடைக்கின்றது, அல்லாஹ்வின் இந்தத் திருப்பொருத் தத்தின் மற்றொரு பெயர்தான் சுவர்க்கமாகும்.

*** * ***

www.uzairfalahi.com